In the Court of the Principal District and Sessions Judge, Dindigul

I.A.01/2022 inO.S.No.139/2018 | Deposition of Witness: PW.3
Name: Subramani | Calling:
Father Name: | Religion:
Village: | Caste:
Taluk: | Age:

Solemnly affirmed in accordance with the provisions of Indian Evidence Act X of 1873 on the day of 06-12-2024.

முதல் விசாரணை பிரமாண வாக்குமூலம் தாக்கல் செய்கிறேன். அதை படித்துப்பார்த்து கையெழுத்து செய்தேன்.

எதிர்மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை :-

பிரதிவாதி செந்தில்குமார் கோர்ட்டுக்கு வரவில்லை எனச்சொன்னார்கள். அது எதனால் என சாட்சியம் அளிக்க வந்துள்ளேன். என்ன மனு போட்டு உள்ளார் என்பது எனக்கு தெரியாது. மில்லுக்கு மாவு வாங்குவது சம்மந்தமாக பிரதிவாதி எனக்கு பழக்கம். நான் தாக்கல் செய்துள்ள நிரூபண வாக்குமூலத்தில் உள்ள விவரங்கள் எனக்கு தெரியும். பிரதிவாதி எந்த காலம் முதல் எந்த காலம் வரை கொரணா தொற்றால் பாதிக்கப்பட்டிருந்தார் என்றால் எனக்கு தெரியாது. அவர் பல மருத்துவமனைகளில் சிகிச்சை பெற்றுள்ளதாக சொல்லி உள்ள நிலையில் எந்த மருத்துவமனையில் சிகிச்சை பெற்றுள்ளார் என்றால் மதுரை மியாட் மருத்துவமனையில் சிகிச்சை பெற்றார். பிரதிவாதி விபத்துக்குள்ளாகி சிகிச்சை பெற்றதாக சொல்லி உள்ள போது எந்த தேதியில் விபத்து ஏற்பட்டது என்றால் அது தெரியாது. விபத்தில் ஏற்பட்ட காயத்திற்காகத்தான் மியாட் மருத்துவமனையில் சிகிச்சை பெற்றார். பிரதிவாதியின் தொழில் பற்றி எனக்கு தெரியும். பிரதிவாதி 2018 முதல் 2023 வரை நன்றாகத்தான் இருந்தார் என்றாலும், அந்த கால கட்டத்தில் சொத்துக்களை வாங்கினார் என்றாலும் நான் இந்த வழக்கிற்காக அவர் உடல்நிலை சரியில்லாமல் இருந்தார் என்று சொல்கிறேன் என்றால் சரியல்ல. பிரதிவாதி 2018 முதல் 2023 வரை பழனி கூடுதல் மாவட்ட நீதிமன்றம், திண்டுக்கல் மாவட்ட நீதிமன்றம், ஒட்டன்சத்திரம் நீதித்துறை நடுவர் நீதிமன்றத்திலும் ஆஜராகி வந்தார் என்றும், அந்த விவரம் எனக்கு நன்கு தெரியும் என்றும் தெரிந்து கொண்டே இவ்வழக்கிற்காக

பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றும் சொன்னால் சரியல்ல. செந்தில்குமார் நோய்வாய்பட்ட விவரமோ, விபத்துக்குள்ளான விவரமோ எதுவும் எனக்கு தெரியாது என்றும் செந்தில்குமார் கேட்டுக்கொண்டதற்கிணங்க சாட்சியம் அளிக்க வந்துள்ளேன் என்றும் சொன்னால் சரியல்ல.

மறு விசாரணை -இல்லை

A MUTHUSARATHA

Digitally signed by A MUTHUSARATHA
Date: 2024.12.06 16:57:09 +0530

Principal District Judge,
Dindigul.